## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
## அறிக்கை – 9-4-2013

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''கிராம ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இந்திய மக்களாட்சியின் அடித்தளமாக அமைந்துள்ளன. கிராம ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நாம் வலுப்படுத்தவில்லை எனில், நமது மக்களாட்சி அமைப்பு வலுவானதாகவும், செயல் திறன் மிக்கதாகவும் இருக்க முடியாது'' என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் வழியில் ஆட்சி நடத்தி வரும் எனது தலைமையிலான அரசு ஊரக பகுதி வாழ் மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

நான் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் என்ற ஒரு புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தினேன். இந்தத் திட்டத்தின்படி, சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு ஒவ்வொன்றும் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 300 சதுர அடி பரப்பளவில் கட்டப்படும் என்றும், ஆண்டிற்கு 60,000 வீடுகள் என்ற அடிப்படையில் ஐந்து ஆண்டுகளில் 3 லட்சம் வீடுகள் கட்டப்படும் என்றும் நான் அறிவித்தேன். எனது அறிவிப்பிற்கிணங்க, 2011–12 ஆம் ஆண்டில் 60,000 வீடுகள் 1,080 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதே போல், 2012–13 ஆம் ஆண்டின் இலக்கான 60,000 வீடுகளில் இதுவரை 20,861 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் அனைத்தும் விரைவில் கட்டி முடிக்கப்பட்டுவிடும். அனைத்து வீடுகளும் பயனாளிகள் மூலமே கட்டப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், கட்டுமானப் பொருட்களான மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றின் விலையேற்றம் காரணமாக சூரிய சக்திக்கான "சூரிய தகடு'', அதாவது Solar Panel மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவான, 30 ஆயிரம் ரூபாய் நீங்கலாக வீடு கட்டுவதற்கு அரசு நிர்ணயித்துள்ள அலகுத் தொகையான 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் வீட்டினை கட்டுவதற்கு சிரமமாக உள்ளது என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போதும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அலகுத் தொகையை உயர்த்திட வேண்டும் என்று கோரினர்.

பயனாளிகளின் வேண்டுகோளினையும், மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கையினையும் ஏற்று, ஏழை மக்கள் பயன்பெறும் வகையில், சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளுக்கான அலகுத் தொகை 2013–14 ஆம் ஆண்டு முதல் 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி வீடு கட்டுமானப் பணிக்கான தொகை 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் எனவும், சூரிய சக்திக்கான உபகரணங்கள் அமைத்திடும் பணிக்கான தொகை 30 ஆயிரம் ரூபாய் எனவும் நிர்ணயிக்கப்படும்.

இதே போன்று, இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட இந்த அரசு நிர்ணயித்துள்ள ஒரு லட்சம் ரூபாய் என்ற அலகுத் தொகை 2013–14 ஆம் ஆண்டு முதல் 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும். இதில் மத்திய அரசின் பங்குத் தொகை 52 ஆயிரத்து 500 ரூபாய் எனவும், மாநில அரசின் பங்குத் தொகை 67 ஆயிரத்து 500 ரூபாய் எனவும் இருக்கும்.

கிராமங்கள் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டும், சுற்று சூழல் சுகாதார மேம்பாட்டை உள்ளடக்கிய "தூய்மையான கிராம இயக்கம்" என்ற ஒரு திட்டம் என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில், 2003 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு அரசின் சார்பில் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன. இதன் மூலம் முழுமையான சுகாதார அமைப்புகள் பெற்ற கிராமங்கள் உருவாகின. ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு, இந்தத் திட்டம் 2006-2007 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவில்லை.

2011-ல் நான் மீண்டும் முதலமைச்சராக பதவியேற்றவுடன், சுகாதார கிராமங்களை உருவாக்குகின்ற இந்த திட்டத்தை மீண்டும் செயல்படுத்த உத்தரவிட்டேன். இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு ஒரு தூய்மையான கிராம ஊராட்சியை தேர்ந்தெடுத்து, அந்த கிராம ஊராட்சிக்கு 5 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும், "தூய்மையான கிராம இயக்கம்" என்ற விருதும் வழங்கப்படும் என்றும் அறிவித்தேன். இதன்படி 31 மாவட்டங்களில் உள்ள 31 கிராம ஊராட்சிகளுக்கு 5 லட்சம் ரூபாய் பரிசு வழங்கும் வகையில், 1 கோடியே 55 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார இயக்கத்தின் கீழ் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை ஒரு முக்கிய கூறாகும். எனவே தான், ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை பணிகளுக்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவன்றி, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி 500 குடும்பங்களுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில் 20 லட்சம் ரூபாய் வரையிலான மதிப்பீட்டில் திட மற்றும் திரவக் கழிவு பணிகளை மேற்கொள்ளலாம். மத்திய அரசு இதற்கென நமக்குரிய 100 கோடி ரூபாய் நிதி உதவித் தொகையை இந்தத் திட்டத்திற்கு அளிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

இந்த நிதியிலிருந்து, குப்பைகளை, மக்கும் மற்றும் மக்காத கழிவுப் பொருட்களாக பிரித்தல் மற்றும் அப்புறப்படுத்துதல்; தெருக்கள், திறந்தவெளிகள் மற்றும் சுற்றுப்புறங்களை கழிவுப் பொருட்கள் இல்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்; கழிவு நீரை அகற்றுதல், கழிவு நீர் உறிஞ்சு குழிகள் அமைத்தல், நீர் ஆதாரங்கள் மற்றும் வடிகால்கள் சுற்றிலும் முறையாக கழிவு நீர் செல்ல தளம் அமைத்தல்; பொதுவான இடங்களிலும், பொது நீர் நிலைகளுக்கு அருகிலும் கழிவு நீர் முறையாக வெளியேற்றப்பட்டு மேலாண்மை செய்தல், கழிவு நீரை மறு சுழற்சி செய்தல்; உரக்குழிகள், மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு கலன்கள் அமைத்தல் போன்ற மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சிகளில் மக்கள் தொகைக்கேற்ப துப்புரவு பணியாளர்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. கிராமங்களில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள தற்போது 9,896 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, இப்பகுதிகளில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள கூடுதலான பணியாளர்களை நியமித்தல் அவசியமாகிறது. இதனை இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு, மக்கள் தொகை 3,000—க்கும் கீழ் உள்ள 8,469 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக ஒன்று வீதமும்; 3,001 முதல் 10,000 வரை உள்ள 3,908 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக இரண்டு வீதமும்; 10,000—க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 147 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக மூன்று வீதமும், ஆக மொத்தம் 16,726 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்திட எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் பணியிடங்களில் பணி அமர்த்தப்படுபவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் 2,000 ரூபாயும், அகவிலைப்படியாக 40 ரூபாயும் வழங்கப்படும். இதன் காரணமாக, ஒரு பணியிடத்திற்கு ஆண்டொன்றிற்கு தோராயமாக 25 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும். 16,726 துப்புரவு பணியாளர்களுக்கு கூடுதலாக 41 கோடியே 81 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும்.

இது மட்டுமல்லாமல், ஊராட்சிகளின் செலவினத்தை கட்டுப்படுத்தும் வகையிலும், மின் சக்தியினை பயன்படுத்துவதில் சிக்கனத்தினை கடைப்பிடிக்கும் வகையிலும், புதுப்பிக்கத்தக்க எரி சக்தியினை ஊக்குவிக்கும் வகையிலும் 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களில் சூரிய சக்தியைக் கொண்டு மின் வசதி ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, 2013—14 ஆம் ஆண்டில் 50 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 500 கிராம ஊராட்சி அலுவலகங்களில் சூரிய சக்தியுடன் கூடிய மின் வசதி ஏற்படுத்தப்படும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி அலுவலகங்களில் உள்ள மின் விசிறிகள், குழல் விளக்குகள், கணினி மற்றும் அச்சுப்பொறி ஆகிய மின் உபகரணங்கள் சூரிய சக்தி மூலம் செயல்படும் வகையில் சூரிய சக்தி கலன் அமைக்கப்படும்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 7 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய சக்தி கலன் அமைத்திட 10 லட்சம் ரூபாய் வீதம் 50 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு மொத்தம் 5 கோடி ரூபாயும்; ஒரு கிராம ஊராட்சிக்கு 0.50 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய சக்தி கலன் அமைத்திட 80 ஆயிரம் ரூபாய் வீதம் 500 கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கு 4 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

மேற்காணும் எனது அரசின் நடவடிக்கைகள் மக்களாட்சியின் அடித்தளமாக விளங்கும் கிராம ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் வலுப்பட வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

* * * * * * *